உங்கள் அபிமான தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil
• பதிப்பு : நாகர்கோவில் • 12.05.2026 • மலர் 04 • இதழ்: 132 • Edition : Nagercoil • 12.05.2026 • Vol : 04 • Issue : 132 • Page : 4 • Rs. 5/-

### உப்பு மட்டுமே உற்பத்தியான குஜராத்தில்

# மெட்ரோ பெட்டிகள், எஞ்சின்கள் தயாரிப்பு

## பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம்



ஜாம்நகர், மே. 12

பிரதமர் மோடி குஜராத்தின் ஜாம்நகர் பகுதியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டார். இதன்பின்னர் அவர் நிகழ்ச்சியில் பேசும் போது, வளர்ச்சியை நோக்கி குஜராத் மிக பெரிய அடியை எடுத்து வைத்திருக்கிறது.

ஒரு காலத்தில் உப்பு தவிர்த்து வேறு எதுவும் குஜராத்தில் உற்பத்தியாகவில்லை.

அந்த குஜராத்தில் , அரை கடத்தி சிப்புகள், மெட்ரோ ரெயில் பெட்டிகள், நவீன ரெயில்களுக்கான என்ஜின்கள் தயாரிக்கப்படுகின்றன.

விமானம் தயாரிப்புக்காகவும் குஜராத் தயாராகி வருகிறது. சுற்றுச்சூழல் பாதிப்புகளால் உலகம் தள்ளாடி வரும் வேளையில், நம்முடைய நாட்டில் பருவநிலைக்கான அர்ப்பணிக்கப்பட்ட ஒரு துறையை முதன்முதலில் நிறுவிய மாநிலம் என்ற பெருமையை குஜராத் பெற்றுள்ளது என்று பேசினார்.

## முன்னாள் முதல்வர் ஸ்டாலினை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார் முதல்வர் ஜோசப் விஜய்



சென்னை மே. 12

தமிழக முதல்வராக பொறுப்பேற்றுள்ள ஜோசப் விஜய், முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலினை அவரது இல்லத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

நடந்து முடிந்த சட்டப் பேரவைத் தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்த தவெகவின் தலைவர் ஜோசப் விஜய், தமிழக முதல்வராக நேற்று பொறுப்பேற்றார். இந்த சூழலில், அவர் தமிழக முன்னாள் முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலினை அவரின் இல்லத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

முன்னாள் முதல்வர் ஸ்டாலினை சந்திக்க ஆழ்வார்பேட்டை இல்லத்துக்கு வந்த ஜோசப் விஜய்யை, சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வாசலுக்கே வந்து ஆரத் தழுவி வரவேற்றார். முன்னாள் முதல்வர் ஸ்டாலினுக்கு ஜோசப் விஜய் பொன்னாடை போர்த்தி வாழ்த்து பெற்றார். பதிலுக்கு ஸ்டாலினும் ஜோசப்விஜய்க்குபொன்னாடை போர்த்தினார். உதயநிதி ஸ்டாலின் ஜோசப் விஜய்க்கு புத்தகம் வழங்கினார்.

இதனையடுத்து முதல்வர் ஜோசப் விஜய், முன்னாள் முதல்வர் ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் சிறிது நேரம் உரையாடினார்கள். இந்த சந்திப்பின் போது முன்னாள் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, ஐ.பெரியசாமி, சக்கரபாணி, சேகர்பாபு உள்ளிட்டோரும் உடனிருந்தனர்.

## முதல்அமைச்சர் விஜய்க்கு கால அவகாசம் கொடுக்க வேண்டும்: பிரேமலதா பேட்டி

சென்னை, மே. 12

சட்டமன்ற தேர்தலில் திமுக கூட்டணியில் போட்டியிட்ட பிரேமலதா விஜயகாந்த், விருத்தாசலம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இந்த நிலையில், பிரேமலதா விஜயகாந்த் சட்டசபைக்கு வருகை தந்து எம்.எல்.ஏ.வாக பதவி ஏற்றுக்கொண்டார். அப்போது முதல் அமைச்சர் விஜய்க்கும், எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலினுக்கு வணக்கம் செலுத்தினார்.

இந்த நிலையில், சட்டசபை வளாகத்தில் பிரேமலதா செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது; "சட்டமன்ற உறுப்பினராக பதவியேற்றுள்ளேன். என்னை வெற்றிபெற வைத்த விருத்தாச்சலம் தொகுதி மக்களுக்கும், கூட்டணி கட்சிதலைவர் ஸ்டாலினுக்கும், அனைவருக்கும் நன்றிகள். இந்த வெற்றியை கேப்டன் விஜயகாந்துக்கு உரித்தாக்குகிறேன். விருத்தாச்சலம் தொகுதி மக்களுக்கு கொடுத்த வாக்குகளை நிறைவேற்றுவேன். முதல்அமைச்சராக பதவியேற்றுள்ள விஜய்க்கு வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். விஜய்க்கு கட்டாயம் நேரம் கொடுக்க வேண்டும். அவருக்கு உரிய அவகாசம் கொடுப்போம். அதன் பிறகு மக்கள் பிரச்சினைகளையும், தமிழகத்தின் உரிமைகளையும் சட்டசபையில் பேசுவோம். " இவ்வாறு அவர் கூறினார்.

## அதிமுக சட்டமன்ற குழு தலைவர் பதவி: பழனிசாமிக்கு 17 எம்.எல்.ஏக்கள் மட்டுமே ஆதரவு



சென்னை, மே. 12

அதி முக சட்டமன்றக் குழுத் தலைவராக எடப்பாடி பழனிசாமி செயல்படுவார் என அக்கட்சியைச் சேர்ந்த 17 சட்டமன்ற உறுப்பினர்கள் பேரவைச் செயலரிடம் மனு அளித்துள்ளனர். இதனால், அதிமுக சட்டமன்றக் குழு தலைவர் பதவியைத் தக்க வைப்பதில் பழனிசாமிக்குச் சிக்கல் எழுந்துள்ளது.

17வது சட்டப்பேரவையின் முதல் கூட்டம் காலை தொடங்கியது. அதிமுக வில் மொத்தம் 47 எம்எல்ஏக்கள் உள்ள நிலையில், சட்டமன்ற கட்சித் தலைவர் பதவிக்கு எடப்பாடி பழனிசாமிக்கு ஆதரவாக இது வரை 17 எம்எல்ஏக்கள் மட்டுமே சட்டமன்றச் செயலரிடம் மனு அளித்துள்ளனர். அதில், அதிமுக சட்டமன்றக் குழுத் தலைவராக எடப்பாடி பழனிசாமி செயல்படுவார் என கூறப்பட்டுள்ளது.

மீதமுள்ள 30 எம்எல் ஏக்களின் நிலைப்பாடு என்ன என்பது கேள்விக்குறியாகியுள்ளது. எஸ்.பி.வேலுமணி, சி,.வி. சண்முகம் தலைமையிலான குழுவில் அதிகப்படியான எம்எல்ஏக்கள் இருப்பதாகக் கூறப்படுவதால், அதிமுகவில் எடப்பாடி பழனிசாமியின் தலைமைக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளதாக சொல்லப்படுகிறது.

## சட்டசபையில் முதல்அமைச்சருக்கு மரியாதை கூட செலுத்தாமல் பதவியேற்ற உதயநிதி

சென்னை, மே . 12

தமிழக முதல்அமைச்சராக தவெக தலைவர் சி. ஜோசப் விஜய் (51) நேற்று பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு கவர்னர் ஆர்.வி. ஆர்லேகர் பதவிப் பிரமாணமும் ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். விஜய்யுடன் 9 பேர் அமைச்சர்களாகப் பதவியேற்றுக் கொண்டனர்.

இந்த நிலையில், தமிழகத்தின் 17வது சட்டசபை கூட்டம் (திங்கட்கிழமை) காலை 9.30 மணி முதல் நடைபெற்று வருகிறது.

இதில் புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள எம்.எல்.ஏ.க்களுக்கு பதவிப்பிரமாணத்தை தற்காலிக சபாநாயகர் கருப்பையா செய்து வைத்து வருகிறார். முதல் நபராக முதல்அமைச்சர்விஜய்பெரம்பூர்தொகுதிஎம்.எல்.ஏ.வாக பொறுப்பேற்றுக்கொண்டார். அதன் பின்பு மற்ற எம்.எல்.ஏ.க்கள் பொறுப்பேற்று உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். அதனை தொடர்ந்து எதிர்க்கட்சி என்ற முறையில்திமுகவின்உதயநிதிஸ்டாலின்எம்.எல்.ஏ.வாக பதவியேற்றுக் கொண்டார்.

பொதுவாக முதல்அமைச்சரிடம் எதிர்க்கட்சித் தலைவர் பரஸ்பரம் தன்னுடைய மரியாதையை தெரிவித்துக் கொண்டு பதவி ஏற்பது தான் இது நாள் வரை சட்டப்பேரவையில் வழக்கமாக இருந்திருக்கிறது. ஆனால் நடைபெற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பதவி பிரமாணத்தின் போது எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் முதல் அமைச்சருக்கு பரஸ்பர மரியாதை கூட செலுத்தாமல் பதவி ஏற்று கொண்டார்.

## 9 ஆண்டுகளுக்குப் பிறகு சத்தியமூர்த்தி பவனில் ராகுல்: தமிழக காங்கிரஸ் தொண்டர்கள் உற்சாகம்



சென்னை, மே. 12

தமிழக முதல்வர் ஜோசப் விஜய்யின் பதவியேற்பு விழாவில் பங்கேற்பதற்காக சென்னை வந்த காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி, நீண்ட இடைவெளிக்குப் பிறகு தமிழக காங்கிரஸ் தலைமையகமான சத்தியமூர்த்தி பவனுக்கு வருகை தந்தது கட்சியினரிடையே பெரும் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது.

டெல்லியிலிருந்து விமானம் மூலம் சென்னை வந்த ராகுல் காந்தி, நேரு உள் விளையாட்டரங்கில் நடைபெற்ற ஜோசப் விஜய் முதல்வராக பதவியேற்கும் விழாவில் கலந்து கொண்டார்.

அங்கிருந்து நேராக சத்தியமூர்த்தி பவன் சென்றார். திரண்டிருந்த ஆயிரக் கணக்கான தொண்டர்கள் கைத்தட்டி அவருக்கு உற்சாகவரவேற்பு அளித்தனர்.

அலுவலக வளாகத்தில் உள்ள காமராஜரின் திருவுருவப் படத்துக்கு ராகுல் காந்தி மலர் தூவி மரியாதை செலுத்தினார். கட்சிக்கு பலம் தொடர்ந்து தமிழக காங்கிரஸ் முக்கிய நிர்வாகிகளுடன் ராகுல் காந்தி ஆலோசனை நடத்தினார்.

அப்போது அவர் பேசுகையில், "தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியை அடிமட்டம் வரை பலப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும். அதற்கு அகில இந்திய காங்கிரஸ் தலைமை முழு ஒத்துழைப்பை வழங்கும்" எனத் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

முன்னதாக, கடந்த 2017 ஜூன் மாதம் இந்திரா காந்தி நினைவு நூலகத்தைத் திறந்து வைக்க ராகுல் காந்தி சத்தியமூர்த்தி பவன் வந்திருந்தார்.

அதன் பின் பலமுறை தமிழகம் வந்திருந்தாலும், சுமார் 8 ஆண்டுகள் 11 மாதங்களுக்குப்பிறகு நேற்றுதான் அவர் மீண்டும் கட்சித் தலைமையகத்துக்கு வருகை தந்துள்ளார்.

இதனால் தொண்டர்கள் உற்சாகத்தின் உச்சத்தில் காணப்பட்டனர். பயணத்தை முடித்துக் கொண்டு மதியம் 1 மணியளவில் அவர் டெல்லி புறப்பட்டுச் சென்றார். அவரை செல்வப்பெருந்தகை மற்றும் மேலிடப் பொறுப்பாளர்கள் வழி அனுப்பி வைத்தனர்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

## கஞ்சா, மது போதையை ஒழிக்க போர்க்கால நடவடிக்கை தேவை: அன்புமணி பேச்சு



சென்னை, மே. 12

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

சேலம் மாவட்டம் சீலநாயக்கன்பட்டியை அடுத்த காட்டுவளவு என்ற இடத்தில் மது போதையில் மாணவர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் இரு மாணவர்கள் உள்ளிட்ட மூவர் ஒன்று சேர்ந்து கோகுல் என்ற சக மாணவரை சரமாரியாக கத்தியால் குத்தி படுகொலை செய்திருப்பது பெரும் அதிர்ச்சி அளிக்கிறது. மாணவன் கோகுலை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவன் கோகுல், அவருடன் பயிலும் மாணவர்கள் இருவர் உள்ளிட்ட மூவரும் இணைந்து மது அருந்திக் கொண்டிருந்த போது, சாதியின் பெயரை சொல்லி திட்டியதால் அவர்களுக்குள் மோதல் ஏற்பட்டுள்ளது. இந்த மோதலில் மாணவன் கோகுலை மற்ற மூவரும் சேர்ந்து கத்தியால் குத்தி படுகொலை செய்துள்ளனர். அதுமட்டுமின்றி, கொலை செய்யும் காட்சிகளை காணொலியாக பதிவு செய்து கொண்டாடியுள்ளனர். இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த அப்பகுதி மக்கள் மூவரையும் பிடித்து காவல்துறையிடம் ஒப்படைத்துள்ளனர்.

மது மனிதர்களை எந்த அளவுக்கு மிருகமாக்குகிறது என்பதற்கு மிக மோசமான எடுத்துக்காட்டு இது தான். தங்களுடன் ஒன்றாக பழகிய நண்பனை கொலை செய்தது மட்டுமின்றி, அதை காணொலியில் பதிவு செய்து கொண்டாடும் அளவுக்கு மது மனிதனை கொடூரனாக மாற்றியிருக்கிறது. மதுவை விட கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்கள் மனிதர்களை மேலும் மோசமாக்குகின்றன.

தமிழ்நாட்டில் மதுவும், பிற போதைப் பொருள்களும் முழுமையாக ஒழிக்கப்பட வேண்டும் என்பதைத்தான் இந்த நிகழ்வு உணர்த்துகிறது. தமிழ்நாட்டில் மது மற்றும் போதையின் சீரழிவுகள் ஏற்கனவே உச்சத்தை அடைந்து விட்டன. நிலைமை மேலும் மோசமாவதைத் தடுக்க தமிழ்நாட்டில் மது மற்றும் போதையை முற்றிலுமாக ஒழிக்க போர்க்கால அடிப்படையில் புதிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## வேலூர் மாவட்டம்

# தமிழக முதல்வராக சி.ஜோசப் விஜய் பதவி ஏற்றதை தொடர்ந்து காட்பாடியில் தமிழக வெற்றி கழகத்தினர் கொண்டாட்டம்!




வேலூர் மே:12
சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் தமிழகத்தின் 13வது முதலமைச்சராக சி.ஜோசப் விஜய் பதவி வேற்றார்

இதனைத் தொடர்ந்து தமிழக வெற்றிக் கழகத் தொண்டர்கள் தமிழகம் முழுவதும் தங்களது வெற்றியை கொண்டாடி வருகின்றனர்

இதனை அடுத்து காட்பாடி கிழக்கு பகுதி தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் அதன் மாவட்டச் செயலாளர்ஏ.நவீன்பகுதி செயலாளர் என். பிரவீன்குமார், ஆகியோரின் ஆணைக்கிணங்க காட்பாடி பகுதி பொருளாளர் சதீஷ்குமார் தலைமையில் காட்பாடி சித்தூர் பேருந்து நிலையத்தில் தமிழக வெற்றி கழகத்தினர் சுமார் 100க்கும் மேற்பட்டோர் பட்டாசு வெடித்து விசில் ஊதி நடனமாடி பேறிஞர் அண்ணா அவர்களின் திரு உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொது மக்களுக்கு இனிப்புகளை வழங்கி கொண்டாடினார்

இதழ் தமிழக வெற்றி கழக முக்கிய நிர்வாகிகள் 6வது வார்டு வட்ட செயலாளர்ஜி.குணசேகரன், மற்றும் ஜி.மணிமாறன், ஆர்.ராஜன், கே.முரளி, சி.சந்தீப், திவாகர், சஞ்சய், கார்த்திக், ஐயப்பன்,6 வது வார்டு வட்ட துணை செயலாளர் பூமிகா, உள்ளிட்டோர் உடன் இருந்தனர்



## பழைய குற்றாலத்தில்

# அருவியில் பொது மக்கள் குளிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணத்தை ரத்து செய்யக்கோரி ஆட்சியரிடம் கோரிக்கை மனு

தென்காசி,மே.12
தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் லூர்து நாடார் தலைமையில் தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவரிடம் கோரிக்கை மனு கொடுக்கப்பட்டுள்ளது

அந்த மனுவில் பெருந்தலைவர் காமராஜரால் உருவாக்கப்பட்ட பழைய குற்றாலத்தில் அருவியில் பொது மக்கள் குளிப்பதற்குநிர்ணயக்கப்பட்டுள்ள கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள்

குற்றாலத்திற்கு வருகின்ற சுற்றுலா பயணிகளின் மூலம் கிடைக்க கூடிய வருமானத்தைக் கொண்டு இலட்சக்கணக்கான குடும்பங்கள் தென்காசி மாவட்டத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள் ஆண்டுதோறும் குற்றால சீசனின் போதும் ஐயப்ப சுவாமி பக்தர்கள்மாலைஅணிந்து வருகின்ற போதும் லட்சக்கணக்கான சுற்றுலா பயணிகள் குற்றாலத்திற்க்கு வந்து செல்லுகின்றார்கள் சுற்றுலா பயணிகளின் நலனுக்காக பெருந்தலைவர் காமராஜரின் ஆட்சி காலத்தில்பழைய குற்றாலத்தில் வீணாக சென்ற தண்ணீரை செயற்கையாக பாறைகளை வடிவமைத்து 1960 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4 ஆம் தேதி பெருந்தலைவர் காமராஜர் பழைய குற்றாலத்தை பொது மக்களின் பயன்பாட்டுக்காக திறந்து வைத்தார்.

பழைய குற்றாலம் அருவி கடந்த ஆண்டு வனத்துறையிடம் ஒப்படைக்கப்பட போகிறது என்ற செய்தியை கேட்டு தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பு மற்றும் பல அமைப்புகள் பழைய குற்றாலத்தை தமிழக அரசு வனத்துறை வசம் ஒப்படைக்க கூடாது என்றும் வனத்துறையானது பொதுமக்களிடம் குளிப்பதற்கு கட்டணம் வசூலிக்க கூடும் அதனால் வனத்துறை வசம் ஒப்படைக்க கூடாது என்று கோரிக்கைகள் முன் வைத்தோம்

ஆனால் எங்களுடைய கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டு பழைய குற்றாலம் பகுதியை வனத்துறை வசம் திமுக தலைவர் முன்னாள் முதல்வர்ஸ்டாலின் தலைமையிலான அரசு ஒப்படைத்தது

தற்போது பழைய குற்றாலம் பகுதிக்குள் வாகனங்கள் நுழைவதற்கு நுழைவு கட்டணம் கட்ட வேண்டி உள்ளது மேலும் குறிப்பிட்ட பகுதி வரை தான் வாகனங்கள் செல்ல முடியும் அதன் பிறகு வனத்துறையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வாகனத்தில் பழைய குற்றாலம் செல்ல பத்து ரூபாய் கட்டணம் வசூலிக்கபடும் என்றும் அருவியில் பொது மக்கள் குளிக்க இருபது ரூபாய் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது மேலும் கழிப்பறை , உடைமாற்றும் அறை போன்றவைகளுக்கு கட்டணம் வசூல் செய்ய வாய்ப்பு உள்ளது மேலும்அருவியில் குளிப்பதற்கு மக்களை தாங்கும் திறன் எவ்வளவு இருக்கிறதோ அதுவரை தான் பொதுமக்கள் அனுமதிக்கப் படுவார்கள் என்று வனத்துறை கட்டுப்பாடு விதித்துள்ளது

பெருந்தலைவர் காமராஜரால் உருவாக்கப்பட்டு சுமார் 65 ஆண்டு காலம் கட்டணம் எதுவும் இல்லாமல் சுற்றுலா பயணிகள் பழைய குற்றாலத்தில் குளித்து மகிழ்ச்சி அடைந்தார்கள் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக பழைய குற்றாலம் அருவியில் குளிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணத்தை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு நாடார்உறவின்முறைகள் கூட்டமைப்பின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம் என்று மனுவில் குறிப்பிட்டு இருந்தார்கள் உடன் பொருளாளர் சுப்ரமணியன், தென்காசி மாவட்ட தலைவர் குருசாமி நாடார், மாநில கல்வி குழு உறுப்பினர் பாலசுப்பிரமணியன், கிருஷ்ணமூர்த்தி, சமீத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மணவாளக்குறிச்சி அருகே

# விஷ மாத்திரை தின்று கொத்தனார் தற்கொலை

நாகர்கோவில், மே .12
மணவாளக்குறிச்சி அருகேகாருபாறை பகுதியை சேர்ந்தவர் குமரேசன் மகன் ஜோதி குமார்( 39). இவருக்கு திருமணம் ஆகி மனைவி மற்றும் பிள்ளைகள் உள்ளனர்.

இந்த நிலையில் கருத்து வேறுபாடு காரணமாக ஜோதி குமாரை அவரது மனைவி விட்டு பிரிந்து சென்று விட்டாராம். இதனால் மனவேதனையில் இருந்த ஜோதி குமார்சம்பவத்தன்று வீட்டில் வைத்து தென்னைக்கு பயன்படுத்தும் மாத்திரையை தின்றுள்ளார். உடனடியாக குடும்பத்தார் அவரை மீட்டு சிகிச்சைக்காக குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கொண்டு சென்றனர். அங்கு சிகிச்சை பலனின்றி ஜோதி குமார் நேற்று உயிரிழந்தார். இது குறித்து கலைச்செல்வி மணவாளக்குறிச்சி போலீசில் புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## வேலூர் மாவட்டம்

# சத்துவாச்சாரியில் SIP அபாகஸ் துவக்கம்



வேலூர் மே:12
வேலூர் சத்துவாச்சாரியில் புதிதாக துவங்கப்பட்டுள்ளSIP அபாகஸ் நிறுவனத்தை விஜடி வேந்தர் கோ.விசுவநாதன் திறந்து வைத்தார். பின்னர் ஒவ்வொரு மாணவரின் நினைவாற்றல், கவனம் மற்றும் கணிதத் திறனை வளர்க்க அபாகஸ் திட்டம் மிகவும் அவசியம் என்ற தெரிவித்தார். அத்துடன், இந்நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்துவதற்காக SIP அபாகஸ் சத்துவாச்சாரி தலைவர் ஸ்ரீலதா முரளி மற்றும் இயக்குநர் விஹாஸ் ஆகியோருக்கு தனது வாழ்த்துக்களை கூறினார். SIP அபாகஸ் காட்பாடி இயக்குநர் விவேக், SIP அகாடமி தமிழ்நாடு தலைவர்கள் சந்துரு, ஸ்ரீராம், ஷரோக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.




## விளவங்கோடு ஊராட்சியில்

# சாலையில் மழை நீர் தேக்கம் கலெக்டரிடம் புகார்

களியக்காவிளை, மே, 12
விளவங்கோடு கிராம ஊராட்சிக்குட்பட்ட அஞ்சாங்கோடு முதல் செறுவாவிளை வரையிலான ரோட்டில் மழைநீர் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்பட்டு தொற்றுநோய் ஏற்படாமல் தடுக்க வலியுறுத்தி மாவட்ட கலக்டரிடம் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பா.ஜ.க மேற்புறம் தெற்கு ஒன்றிய இளைஞர் அணி தலைவர் சஜின் மற்றும் சக்தி கேந்திர பொறுப்பாளர் சதீஷ், ஊர் பொதுமக்கள் சார்பில் மாவட்ட ஆட்சியாளரிடம் கொடுத்த புகார் மனுவில் கூறியிருப்பதாவது:

விளவங்கோடு கிராம ஊராட்சிக்கு உட்பட்ட அஞ்சாங்கோடு முதல் செறுவா விளைவரையிலான ரோட்டில் மழைநீர் தேங்கியுள்ளது. இவ்வாறு தேங்கியுள்ள மழை நீரில் இருந்து தூர்நாற்றம் வீசுகிறது. ஆகவே மழைநீரில் கொசு உற்பத்தியாகியுள்ளது. இதனால் அப்பகுதியில் அமைந்துள்ள வீடுகளில் வசிக்கும் பொது மக்கள் பல வித நோய்களால் பாதிக்கப்பட்டு அவதிப்படுகின்றனர். இது தொடர்பாக சுகாதார துறை அதிகாரிகள் மற்றும் ஊராட்சி நிர்வாகம் எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. ஆகவே அப்பகுதியில் கழிவுநீர் ஓடை அமைத்து சுகாதார சீர்கேட்டை சீரமைக்குமாறு மாவட்ட கலக்டரிடம் கொடுத்துள்ள புகார் மனுவில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

## மணவாளக்குறிச்சி அருகே

# பாதை தகராறில் பெண் உட்பட 11 பேர் மீது ஆர்டிஓ விசாரணை

குளச்சல், மே .12
மணவாளக்குறிச்சி அருகே தலகுளம் பகுதியை சேர்ந்தவர் பாலசுப்பிரமணியன் மனைவி ஸ்ரீஜா குமாரி (30). இவர்களுக்கும் அதே பகுதியை சேர்ந்த ரவிக்குமார் ( 52 )என்பவருக்கும் இடையே வழிப்பாதை பிரச்சனை இருந்து வருகிறது. கடந்த மாதம் 25ஆம் தேதி ரவி, பாபு ஆகியோர் பாதை அடைத்து முள்வேலி அமைத்ததாக தெரிகிறது. இதனை ஸ்ரீஜா குமாரி தடுத்ததா கூறப்படுகிறது. இது குறித்து மணவாள குறிச்சி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் ரவிக்குமார் சொத்தில் கம்பி வேலி போடும்போது ஸ்ரீஜா குமாரி தாக்கியதாக வழக்கும் விசாரணையில் இருந்து வருகிறது.

இது தவிர ரவிக்குமார் போட்ட கம்பிவேலியை அடித்து உடைத்ததாகவும் பாலசுப்பிரமணியம், கணபதி உட்பட 9 பேர் மீதும் வழக்கு விசாரணையில் இருந்து வருகிறது. மேலும் கணபதி வீட்டுக்கு செல்லும் பாதையை அடைத்ததாக ஜேசிபி டிரைவர் உட்பட 3 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த பிரச்சனைகளால் அங்கு இருதரப்பினருடைய மோதல் ஏற்பட்டு, சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட வாய்ப்பு உள்ளதால் சமரச தீர்வுக்காக ஆர்டிஓ விசாரணைக்காக மனவளக்குறிச்சி போலீசார் ஸ்ரீஜா குமாரி, ரவிக்குமார் உட்பட 11 பேர் மீது வழக்கு பதிவு செய்தனர். இவர்கள் விசாரணக்காக ஆர் டி ஓ முன்பு ஆஜராக வேண்டும். இதற்கான நாள், விவரம் அடங்கிய சம்மன் இவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என போலீசார் தெரிவித்தனர்.



செங்குன்றத்தில் கடந்த 37 ஆண்டுகளாக தரத்திலும், நம்பிக்கையிலும், முதலிடம் பெற்று பொதுமக்களின் நம்பிக்கையையும் பாராட்டையும் பெற்று வரும் நியூ மணி டெக்ஸ்டைல்ஸ் தற்போது மூன்றாவது புதிய கிளையாக திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை சிக்னல் அருகில் மிகப்பிரமாண்டமாக திறக்கப்பட்டது. கடையின் உரிமையாளர் டேவிட் ராஜ், சோனியா வருகை தந்த அனைவரையும் வரவேற்றனர். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திமுக முன்னாள் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி ஜே எஸ். கோவிந்தராஜன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர். இந்நிகழ்ச்சியில் மலர்ச்சி தொண்டு நிறுவனம் பரமன் பச்சைமுத்து, கலந்து கொண்டார். ஆயிரம் ரூபாய்க்கு மேல் பொருட்கள் வாங்குவோருக்கு சிறப்பு பரிசு வழங்கப்படும் என்று கடை மேலாளர் பேட்ராஜ், தனன்ஜெயன் கூறினார்.



## பாலக்கோட்டில்

# பாஜக 3 மாநிலத்தில் வெற்றி பெற்றதை பாஜகவினர் இனிப்பு வழங்கி கொண்டாடினர்

தருமபுரி மே 12
தருமபுரி மாவட்டம் பாலக்கோடு பேருந்து நிலையம் முன்பு 3 மாநிலங்களில் பாஜக வெற்றி பெற்றதை அடுத்து மத்திய அரசு நலத்திட்ட பிரிவு மாவட்ட துணை தலைவர் சிவா தலைமையில் பட்டாசு வெடித்தும் இனிப்பு வழங்கியும் கொண்டாடினர்கள்.

இதில் கடந்த மாதம் மேற்குவங்காளம், அசாம், புதுச்சேரி, தமிழ்நாடு, கேரளா ஆகிய 5மாநில சட்டப் பேரவைகளுக்கு நடைபெற்ற தேர்தல் வாக்கு எண்ணிக்கை முடிவடைந்த நிலையில் பெண்களின் கவுரவத்துக்காகவும், ஏழைகளின் நலனுக்காகவும் மக்கள் வாக்களித்து மேற்குவங்காளம், அசாம், புதுச்சேரி உள்ளிட்ட மூன்று மாநிலங்களில் பாஜக வெற்றி பெற்றது.

இதில் கட்சித் தொண்டர்கள் மகிழ்ச்சியை கொண்டாடும் வகையில் பட்டாசு வெடித்தும், பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கியும் கொண்டாடினர்.

இந்த நிகழ்ச்சியில் நகர செயலாளர் நத்தகிரி,ஒன்றிய மகளீர் அணி செயலாளர்பிரேமா, மாவட்ட செயற்குழு உறுப்பினர் பிரேம் ஆனந்த், முன்னால் மாவட்ட செயற்குழு

உறுப்பினர் ஸ்ரீதேவி, மாவட்ட செயற்குழு உறுப்பினர் கிருஷ்ணன்,நகர கிளை தலைவர் பெரியண்ணன், நகர காளை செயலாளர் முருகன், அலகு பெருமாள் உள்ளிட்ட ஏராளமான பாஜக கட்சி தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

## ரீத்தாபுரம் அருகே

# குளத்தில் ஆபத்தாக விழுந்து கிடக்கும் மரம்

### மழை வெள்ளம் பெருகும் முன் அகற்ற பொதுமக்கள் கோரிக்கை



குளச்சல்,மே.12
கரையாகுளத்தில் ஒரு வருடத்திற்கும் மேலாக ஆபத்தாக விழுந்து கிடக்கும் மரத்தை அகற்ற வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

குளச்சல் அருகே ரீத்தாபுரம் பகுதியில் கரையாகுளம் உள்ளது. இந்த குளம் 26.88 ஹெக்டேர் பரப்பளவு கொண்டது. சுமார் 25 அடி ஆழமானது. மழைக்காலங்களில் அருகில் உள்ள பாம்பூரி வாய்க்காலில் இருந்து மறுகால் பாயும் வெள்ளம் புற ஓடை வழியாக இதில் தேக்கி வைக்கப்படுகிறது. இந்த வெள்ளத்தை அப்பகுதி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் குளிப்பதற்கும் பெரிதும் பயன்படுத்துகின்றனர்.

தவிர இந்த குளத்தின் கரையில் பேரூராட்சியின் 3 ஆழ்குழாய் கிணறுகள் உள்ளன. இதன் மூலம் பேரூராட்சி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது கோடைக்காலம் என்பதால் குளத்தில் தண்ணீர் வற்றி வருகிறது.

இதற்கிடையே இந்த குளத்தின் வட கிழக்கு கரையில் வளர்ந்து நின்ற மரம் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு பெய்த மழையில் சாய்ந்து குளத்தின் படித்துறை பகுதியில் விழுந்துள்ளது. இதனால் பொதுமக்கள் குளிப்பதற்கு கடும் சிரமமடைந்து வருகின்றனர்.

அடுத்த மாதம் தென் மேற்கு பருவமழை தொடங்கினால் குளம் முழுவதும் நிரம்பி விடும். மரத்தின் கிளைகள் படித்துறையை நோக்கி நீண்டுள்ளது. மழையில் மரம் முழுவதும் மூழ்கினால் மரம் குளத்தில் மூழ்கி கிடப்பது தெரியாது. சிறுவர்கள் குளத்தில் குதித்து நீச்சலடித்து குளிக்கும்போது ஆபத்தில் சிக்கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே தென் மேற்கு பருவமழைக்கு முன்பு குளத்தில் கிடக்கும் மரத்தை சம்பந்தப்பட்டத்துறை அதிகாரிகள் மரைத்தை ஏலமிட வேண்டும் அல்லது மரத்தை கரையேற்றி போட வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

# ஏர்வாடி தர்கா சந்தனக்கூடு விழா
## பல்லாயிரக்கணக்கான மக்கள் மலர் தூவி வரவேற்பு



இராமநாதபுரம் மே.12

ராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடியில் 852ம்ஆண்டுகளாக அனைத்து சமூக மக்களும் இணைந்து மத நல்லிணக்கத்துடன் பாதுஷா நாயகம் தர்காவில் நடைபெறும் சந்தனக்கூடு திருவிழாவை நடத்தி வருகின்றனர் என்பது நமது மாவட்டத்திற்கு மட்டுமில்லாமல் தமிழகத்திற்கே பெருமை சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது.

ஏர்வாடி சந்தனக்கூடு திருவிழாவில் ஜாதிகள் இல்லை. மதங்கள் இல்லை.

மொழிகள் இல்லை. இனங்கள் இல்லை. இவற்றை எல்லாம் கடந்து இந்திய ஒற்றுமையிலும், ஒருமைப்பாட்டிலும் முன்னிலை வகிக்கிறது. சிறப்பு வாய்ந்த ராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடி தர்காவில் நேற்று அதிகாலை நடைபெற்ற மதநல்லிணக்க சந்தனக் கூடு திருவிழாவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

ஏர்வாடியில் அல்குத்புல் அக்தாப் சுல்தான் செய்யது இப்ராகீம் பாதுஷா நாயகம் தர்காவின் 852ம் ஆண்டு சந்தனக்கூடு விழாவிற்கான மவுலீது எனும் புகழ் மாலை ஏப்18ந்தேதி மாலை 6:30 மணிக்கு தொடங்கியது. ஏப் 27ந் தேதி அடிமரம் ஊன்றப்பட்டது ஏப்28 தேதி மாலை கொடி ஊர்வலமும், கொடியேற்றமும் நடந்தது. மே11அதிகாலை 4:00மணிக்கு ஏர்வாடி முஜாவிர் நல்ல இப்ராகீம் மகாலில் இருந்து குதிரைகள் நாட்டியமாடியவாறு செல்ல, யானைக்கு முன்பாக சந்தனக் குடங்களை தர்காஹக்தார்கள்கொண்டு வந்தனர். மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட சந்தனக்கூடு தேரை அனைத்து சமுதாயத்தினரும் இழுத்து வந்தனர் பல்லாயிரக்கணக்கான மக்கள் வழி நெடுகிலும் சந்தனக்கூடுவிற்கு மலர் தூவி வரவேற்றனர். தீப்பந்தம், பச்சை பிறைக் கொடிகள் ஏந்தியவாறு ஊர்வலம் தர்காவை மூன்று முறை வலம் வந்தபின்அதிகாலை 5:00 மணிக்கு பாதுஷாநாயகத்தின் அடக்க ஸ்தலத்தில் சந்தனம் பூசப்பட்டு, வண்ணப் போர்வை, மல்லிகை சரத்துடன் போர்த்தப்பட்டது. மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக திகழும் இவ்விழாவில் அனைத்து சமூகத்தினர் மற்றும் கேரளா, ஆந்திரா, கர்நாடகா மகாராஷ்டிரா உள்ளிட்ட வெளிமாநிலங்களிலிருந்தும் ஏராளமானோர் பங்கேற்றனர். மே 18ந்தேதி அன்று கொடியிறக்கம் செய்யப்பட்டு நெய்சோறு அன்னதானம் வழங்கப்படும். விழா ஏற்பாடுகளை ஏர்வாடி தர்கா ஹக்தார் நிர்வாக சபை தலைவர் அஹமது இப்ராஹிம் துணைத் தலைவர் முஹம்மது சுல்தான் செயலாளர் ஜாகிர் உசேன் ஹக்தார் நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் பொது மகாசபை உறுப்பினர்கள் ஏற்பாடுகள் செய்திருந்தனர். ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் மற்றும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் சந்தீஸ் இருவரின் உத்தரவின் பேரில் ராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஹபிபூர் ரஹ்மான் கீழக்கரை வட்டாட்சியர் ராம்சுப்பு இராமநாதபுரம் கோட்ட ஆய அலுவலர் ஜலால் முகம்மது கடலாடி வட்டார வளர்ச்சி அலுவலர் ஜெய ஆனந்த் கீழக்கரை உட்கோட்டா உதவி காவல் கண்காணிப்பாளர் குணால் உத்தம் ஷரோதே தலைமையில் ஏர்வாடி தர்கா காவல் ஆய்வாளர் ஜெய சங்கர் மேற்பார்வையில் ஏர்வாடி தர்கா காவல் சார்பு ஆய்வாளர் அருள் உள்பட 800க்கும் மேற்பட்ட போலீசார் அரசு அதிகாரிகளும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர் சீருடை அணியாத போலீஸ் சமூக விரோதிகள் நடமாடத்தை ரகசியமாக கண்காணித்து தனிப்படை போலீசார் பாதுகாப்பு பணியில் சிறப்பாக செய்து வந்தார்கள்.



கன்னியாகுமரியில்

# படகு துறைக்கு செல்லும் வழிகளை மாவட்ட போலீஸ் எஸ் பி நேரில் ஆய்வு

கன்னியாகுமரி, மே.12

சர்வதேச சுற்றுலாத்தலமான கன்னியாகுமரிக்கு தினமும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். இந்த நிலையில் தற்போது கோடைகால சீசன் தொடங்கி நடைபெற்று வருவதால் கன்னியாகுமரியில் சுற்றுலா பயணிகளும் வருகை அதிகமாக காணப்படுகிறது.

இதனால் திருவள்ளுவர் பாறைக்கு செல்லும் படகு சேவையில் கடும் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. நேரடியாகவும், ஆன்லைன் மூலமாகவும், விஐபி என மூன்று வித டிக்கெட்டு முறையால் சுற்றுலா பயணிகள் தனித்தனி வரிசைகளில் நிறுத்தப்பட்டதால் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. அதிக அளவில் சுற்றுலா பயணிகள் திரண்டதால் காவல்துறை மற்றும் ஊழியர்களால் கூட்டத்தை முழுமையாக கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. தள்ளமுள்ளு ஏற்பட்டதில் சிலர் காயமடைந்ததாக சமூக வலைத்தளங்களில் தகவல் பரவியது.

இந்த நிலையில் மாவட்ட எஸ்பி ஸ்டாலின் கன்னியாகுமரியில் உள்ள படகுத்துறைக்கு செல்லும் இடங்களை நேரில் நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் அவர் கூட்ட நெரிசல் ஏற்படும் நேரங்களில் பேரிகாடுகள் அமைத்து பயணிகள் சிரமம் இன்றி செல்ல வழி வகை செய்ய வேண்டும் என்று பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக ஊழியர்களிடம் அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது டிஎஸ்பி ஜெயச்சந்திரன், இன்ஸ்பெக்டர் சுந்தர்ராஜ பெருமாள் மற்றும் போலீசார் உடன் இருந்தனர்.



திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில்

# மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம்

திருப்பத்தூர்:மே:12,

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில்,மனுவழங்கியதைதொடர்ந்து, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், ரூ.1400/ மதிப்பிலான 1 மாற்றுத்திற னாளிக்கு ஊன்றுகோலை மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.நாரா யணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் டாக்டர்.உமாமகேஸ்வரி, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் தமிழ்நங்கை, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) பூஷணகுமார், உதவி இயக்குநர் ஊராட்சிகள் (தெற்கு) மகாதேவன், (வடக்கு) முருகன், மாவ ட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் தணிகாசலம், மாவட்ட பழங்குடியினர் நலதிட்ட அலுவலர் செந்தில்குமார், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) முருகேசன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் தாமரைமணாளன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கண்ணன் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில்

# மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம்



நாகர்கோவில், மே.12

தமிழ்நாட்டில் கடந்த மார்ச் மாதம் 15 ஆம் தேதி சட்டமன்ற தேர்தல் அறிவிக்கபட்டது. இதைத்தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிமுறைகள்அமலுக்கு வந்தது. கடந்த ஏப்ரல் 23ஆம் தேதி வாக்குப்பதிவு நடந்தது. மே மாதம் 4 ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. நேற்று முன்தினம் புதிய அரசு பொறுப்பேற்றுள்ளது.

தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருந்ததால் கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர் முகாம்கள் உள்ளிட்ட மீனவர் குறைதீர் முகாம்கள் ரத்து செய்யப்பட்டது. இந்த நிலையில் புதிய அரசு பொறுப்பு ஏற்றதை தொடர்ந்து விதிமுறைகள்அனைத்தும் முடிவுக்கு வந்து விட்டன.

அதன்படி நேற்று திங்கள் கிழமை மக்கள் குறைதீர் முகாம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் நடந்தது.

மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா தலைமை வகித்தார். இந்த மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், பொது மக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 166 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது.

பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு துறைசார்ந்த அலுவலர்களுக்கு கலெக்டர் அறிவுறுத்தினார்.

நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட வருவாய்அலுவலர்பூங்கோதை,ஊரகவளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னான்டோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் பத்மபிரியா, ரோஷன்பேகம் (தேர்தல்), மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் செந்தூர் ராஜன், உதவி ஆணையர் கலால் ஈஸ்வரநாதன், முன்னாள் படைவீரர் நலன் துணை இயக்குநர் மேஜர்.வி.எஸ்.ஜெயகுமார், துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

த.வெ. க வெற்றி கொண்டாட்டம்

# தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடைகள் வழங்கும் நிகழ்ச்சி



திருப்பூர் :மே12

தமிழ்நாடு முன்னேற்ற பாதையில் தொடர்ந்து பயணிக் கட்டும்திருப்பூர் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் கோபால் சாமி அவர்களின் வழிகாட்டுதலின்படி 43 வது வார்டு தலைவி எஸ்.பிரேமலதா தலைமையில் மக்கள் நலம் சார்ந்த சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி தமிழக வெற்றிக் கழகத்திற்கு வாக்களித்த வாக்காள பெருமக்களுக்கும் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து பள்ளி மாணவர்களுக்கு தேவையான நோட்டு புத்தகங்கள் அப்பகுதியில் உள்ள தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடைகள் வழங்கி அவர்களின் சேவைகளை பாராட்டினர். வெற்றி கொண்டாட்டத்தில் தேசியத் தோழர்கள் அபுதாஹீர், ராமகிருஷ்ணன், பாபு, அம்ஜத் கான், தேவா, ஏழுமலை, செல்வம், சாதி பாட்ஷா, டி .வி .கே . மூர்த்தி மற்றும் பல் சமய நட்புறவு தலைவர் ஷாஜகான், 43 வது வார்டு நிர்வாகிகள் சௌமியா கவிதா பெனாசீர் சந்தோசினி ஜெயந்தி பிரியாநிர்வாகிகள் அனைவரும் ஒன்றிணைந்து இந்நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்தி முடித்தனர்..



அகில இந்திய மக்கள் நல கழகம் மாநிலத் தலைவர் டாக்டர் சிவக்குமார் மாநில துணைத்தலைவர் வழக்கறிஞர் பி.சதீஷ் மாவட்டத் தலைவர் கோபால் ரெட்டி ஆலோசனைப்படி கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரையில் அகில இந்திய மக்கள் நலக் கழகம் சார்பாக வித்யா செந்தில்குமார் மகன் நவநிஷ் பிறந்த நாளுக்கு ஆதரவற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது

அஞ்சுகிராமம் அருகே

# மின்சாரம் தாக்கி லாட்ஜ் ஊழியர் உயிரிழப்பு

நாகர்கோவில், மே. 12

அஞ்சுகிராமம் அடுத்த அழகப்பபுரம் பகுதியை சேர்ந்தவர் வில்சன் செல்வராஜ் ( 66). தனியார் லாட்ஜ் ஒன்றில் ஊழியராக வேலை பார்த்து வந்தார். நேற்று முன்தினம் மாலை இவர் வீட்டிலிருந்து வெளியே சென்றார். பின்னர் நீண்ட நேரமாக அவர் வீட்டுக்கு திரும்பி வரவில்லை. இதையடுத்து அவரது மனைவி ஜார்ஜ் மேரி அக்கம்பக்கத்தில் தேடினார். வீட்டில் பின்புறம் உள்ள தோட்டங்களில் தேடியும் வில்சன் செல்வராஜை காணவில்லை.

பின்னர் அருகில் உள்ள மற்றொரு தோப்பில் சென்று தேடியபோது அங்குள்ள பின்வாசல் அருகே அவர் மயங்கிய நிலையில் கிடந்தார். உடனடியாக அருகில் சென்று பார்த்த போது, அறுந்து விழுந்த மின் கம்பியில் கால் வைத்து இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. உடனடியாக இது குறித்து மின்வாரிய அலுவலகத்துக்கு தகவல் தெரிவித்தனர்.

மின்வாரிய பணியாளர்கள் சம்பவ இடத்தில் வந்து மின் இணைப்பை துண்டித்தனர். பின்னர் வில்சன் செல்வராஜை குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை கொண்டு சென்றனர். அங்கு பரிசோதனையில் அவர் இறந்தது தெரிய வந்தது. விசாரணையில் மின் கம்பி அறுந்து, மின்கம்பியை மிதித்ததால் இறந்தது தெரிய வந்துள்ளது. இது குறித்து அஞ்சுகிராமம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.





கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில்

# மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

கிருஷ்ணகிரி, மே. 12

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வாரந்தோறும் திங்கட்கிழமை அன்று மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம், வீட்டுமனைப் பட்டா, விலையில்லா தையல் இயந்திரம், சலவைப் பெட்டி, முதியோர் உதவித்தொகை, சாலை வசதி மற்றும் மின் இணைப்பு போன்ற பல்வேறு கோரிக்கைகள் குறித்து 213 மனுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது. இக்கூட்டத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட மனுக்களில் தகுதியான மனுக்கள் மீது துறை சார்ந்த அலுவலர்கள் உடனடி நடவடிக்கை எடுக்கவும், தகுதியில்லாத மனுக்களுக்கு உரிய விளக்கத்தினை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் தெரிவித்தார். தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக, 7 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1,10,250 மதிப்பில் சக்கர நாற்காலிகள், மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட 2 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.19,000 மதிப்பில் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட சக்கர நாற்காலிகள் என மொத்தம் 9 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1 இலட்சத்து 29 ஆயிரத்து 250 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் .அ.சாதனைக்குறள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) .கிருஷ்ணன், மாவட்ட வழங்கல் அலுவலர் .கீதாராணி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் .சிவக்குமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர்நல அலுவலர்.அமீர் பாஷா, மாற்றுத்திறனாளி நல அலுவலர் .முருகேசன் மற்றும் அனைத்து துறை முதன்மை அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

ராஜாக்கமங்கலம் அருகே

# ஹோட்டலில் தனியார் நிறுவனர் தாக்குதல்; 2 பேர் மீது வழக்கு

நாகர்கோவில், மே. 12

நாகர்கோவில்அடுத்தராஜாக்கமங்கலம்துறைபகுதியை சேர்ந்தவர் லெக்கின் தாஸ் (27). இவர் நாகர்கோவில் வல்லன்குமாரன்விளையில் உள்ளதனியார்நிறுவனத்தில் மேலாளராக உள்ளார். கடந்த 9ம் தேதி இவரும் நண்பர்கள் ரூபன், ரிக்கில் ஆகியோர் தர்மபுரத்தில் உள்ள ஒரு ஹோட்டலுக்கு சாப்பிட சென்றனர். அப்போது அந்த ஓட்டலில் சிக்கன் 65 கேட்டுள்ளனர் அப்போது ஓட்டல் ஊழியர் சிக்கன் 65 வைத்துள்ளார். இதில் சிக்கன் பீஸ் குறைவாக இருந்துள்ளது. ஏன் பீஸ் குறைவாக உள்ளது என லெக்கின் தாஸ் கேட்டுள்ளார்.

இதில் அவர்களுக்கிடையே தகராறு ஏற்பட்டுள்ளது. ஹோட்டல் ஊழியர் உரிமையாளர் தியாகராஜன் (65) என்பவருக்கு போன் செய்துள்ளார். அவர் நடத்தில் பேச்சுவார்த்தையில் தகராறு அதிகரித்தது. அப்போது லெக்கின் தாசை கல்லால் தாக்கி தலையில் காயம் ஏற்படுத்தி உள்ளனர். காயமடைந்தவரை குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

இது குறித்த புகாரின் பேரில் ராஜாகமங்கலம் போலீசார் ஓட்டல் ஊழியர்ஐயப்பன்(45), ஹோட்டல் உரிமையாளர் தியாகராஜன்(65) ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்தனர்.

### ஆரல்வாய்மொழி அருகே

# பூ வியாபாரிக்கு கத்தரிக்கோல் குத்து: 3 பேர் மீது வழக்கு

நாகர்கோவில், மே.12

ஆரல்வாய்மொழி அருகே உள்ள தோவாளை வடக்கூர் பகுதியை சேர்ந்தவர் மகேஷ் (44). பூ வியாபாரம் செய்து வருகிறார். இவர்கடந்த6மாதங்களுக்குமுன்புதோவாளை சுப்பிரமணியபுரத்தை சேர்ந்த ஈஸ்வரமூர்த்தி (42) என்பவருக்கு மல்லிகை பூ கொடுத்துள்ளார். இதில் ரூ 2000 பணம் கொடுக்க வேண்டி உள்ளது.

இந்த பணத்தை ஈஸ்வரமூர்த்தி கொடுக்காமல் இருந்து வந்ததாகதெரியவருகிறது. இந்தநிலையில்ஈஸ்வரமூர்த்தி தனக்கு பணம் கொடுக்காமல் இருப்பது பற்றி மகேஷ் தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவு செய்துள்ளார். அதில் ஈஸ்வரமூர்த்தி பூ வாங்கினால் பணம் தரமாட்டான். கேட்டால் மிரட்டுவான் என்று பல விட்டுள்ளார்.

இந்தபதிவைபார்த்தஈஸ்வரமூர்த்தி ஆத்திரமடைந்தார். தன்னை பற்றி பேஸ்புக்கில் பதிவிட்டது ஏன் என கேட்டுள்ளார். இதனால் இருவரும் பெரிய தகராறு ஏற்பட்டுள்ளது. இதை அடுத்து நேற்று முன்தினம் ஈஸ்வரமூர்த்தி உட்பட 3 பேர் சேர்ந்து மகேஷை தாக்கி, கத்திரிகோலால் குத்தி உள்ளனர். இதில்மகேஷ்படுகாயம் அடைந்தார். சம்பவம் குறித்து மகேஷ் அளித்த புகார் பேரில் ஈஸ்வரமூர்த்தி அவரது மனைவி சகிலா உட்பட 3 பேர் மீது ஆரல்வாய்மொழி போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.



# தமிழ்நாடு அரசின் அரசாணையை நிறைவேற்ற கோரிக்கை!

கோவை மே:12

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு அரசின் அரசாணை வெளியிட்டிருந்த நிலையில் அம்பேத்கர் ஆகியோர் புகைப்படங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில்,அரசு அலுவலகங்களில் வைக்க வேண்டும் என்ற எங்கள் தொடர் கோரிக்கைக்கு இதுவரை மாவட்ட நிர்வாகம் எந்த பதிலும் எங்களுக்கு அளிக்கவில்லை. உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் எங்கள் கோரிக்கைக்கு உடனடியாக பதில் தர வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறோம்.

# 17வது சட்டசபையின் முதல் கூட்டம்: புதிய எம்.எல்.ஏ.க்கள் பதவியேற்றனர்



சென்னை, மே. 12

தமிழகத்தின் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் கடந்த 23ம் தேதி தேர்தல் நடைபெற்றது. முதல்அமைச்சர் விஜய், பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய 2 தொகுதிகளில் போட்டியிட்டு 2 தொகுதிகளிலும் வெற்றி பெற்றார்.

முதல்அமைச்சராக பொறுப்பேற்றதும், திருச்சி கிழக்கு தொகுதிக்கான சட்டமன்ற உறுப்பினர் பதவியை விஜய் ராஜினாமா செய்துள்ளார். அதற்காக அவர் கொடுத்த ராஜினாமா கடிதம் ஏற்கப்பட்டதால், 234 தொகுதிகளில் ஒரு தொகுதி காலியாகிவிட்டது.

இந்த நிலையில், தமிழகத்தின் 17வது சட்டசபை கூட்டம் தொடங்கியது. இதில் புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள எம்.எல்.ஏ.க்களுக்கு தற்காலிக சபாநாயகர் கருப்பையாபதவிப்பிரமாணம் செய்து வைத்தார். முதல் நபராக முதல்அமைச்சர்விஜய்பெரம்பூர்தொகுதி எம்.எல்.ஏ.வாக பொறுப்பேற்றுக்கொண்டார். அதனை தொடர்ந்து மற்ற எம்.எல்.ஏ.க்கள் பொறுப்பேற்று உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். நாளை காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் தேர்தல் நடைபெறும். 13ந் தேதிக்குள், அரசின் மீதான நம்பிக்கை கோரும் தீர்மானத்தை சட்டசபையில் நிறைவேற்றி பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு கவர்னர் உத்தரவிட்டுள்ளார்.

# பா.ம.க. பிரமுகர் வீடு மீது பெட்ரோல் குண்டு வீச்சு: சிறுவர்கள் உள்பட 3 பேர் கைது

தஞ்சை, மே. 12

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அருகே உமாமகேஸ்வரபுரம் பகுதியை சேர்ந்தவர் செந்தில் (வயது45). இவர் பா.ம.க. மாவட்ட இளைஞர் அணி செயலாளராக உள்ளார். சம்பவத்தன்று இரவு இவர் வீடு மீது மர்மநபர்கள் சிலர் பெட்ரோல் குண்டுகளை வீசி விட்டு தப்பி சென்றனர்.

இதுகுறித்து செந்தில் தாலுகா போலீஸ் நிலையத்தில் புகார்கொடுத்தார். அதன்பேரிலபோலீசார்வழக்குப்பதிவு செய்து பெட்ரோல் குண்டு வீசி சென்ற மர்ம நபர்கள் யார்? எதற்காக வீசினார்கள்? என்பது குறித்து விசாரணை நடத்தி வந்தனர்.

இதில் கும்பகோணம் தாராசுரம் மிஷன் தெரு பகுதியை சேர்ந்த கருணாநிதி மகன் சக்தி ஹரிஷ் (19) மற்றும் 2 சிறுவர்களிடம் போலீசார் சந்தேகத்தின் பேரில் விசாரணை நடத்தினர். விசாரணையில் செந்திலின் உறவினரான சிறுவனுக்கும், மற்றொரு சிறுவனுக்கும் இடையே திருட்டு வழக்கு சம்பந்தமாக முன் விரோதம் ஏற்பட்டுள்ளது. இதனால் செந்திலின் உறவினரான சிறுவனை மிரட்ட சென்றபோது ஏற்பட்ட தகராறில் செந்தில் வீடு மீது பெட்ரோல் குண்டு வீசப்பட்டதும் தெரியவந்தது. இதனையடுத்து சக்தி ஹரிஷ் மற்றும் 2 சிறுவர்கள் உள்பட 3 பேரை போலீசார் கைது செய்தனர்.

### ஒகேனக்கலில்

# மீன் விற்பனை நிலையங்கள் மற்றும் உணவகங்களில் உணவு பாதுகாப்புத் துறையினர் திடீர் ஆய்வு

தருமபுரி மே 12

தருமபுரி மாவட்ட சுற்றுலா தளமான ஒகேனக்கலில், கோடை விடுமுறை தொடங்கி உள்ள நிலையில் அண்டை மாநிலங்கள் , வெளியூரி(மாவட்டம்) களிலிருந்து சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்து ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி மற்றும் இயற்கை அழகை பரிசலில் சென்று கண்டுகளிக்கவும், இளைப்பாறி வறுவல் மீன்கள்,மீன் குழம்பு மற்றும் மீன் உணவுவகைகள் அருந்தி செல்கிறார்கள். ஆகையால் ஒகேனக்கலில் விற்கப்படும் மீன்கள் தரம் மற்றும் உணவகங்கள் சுகாதாரம் குறித்து ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் சதீஸ் உத்தரவின் பேரில் உணவு பாதுகாப்பு துறை மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர் கைலாஷ்குமார் மற்றும் மீன் வளம் , மீனவர் நலத்துறை உதவிஇயக்குனர்விஜயராகவன்ஆகியோர் மேற்பார்வையில் , பென்னாகரம் ஒன்றிய உணவுபாதுகாப்புஅலுவலர்நந்தகோபால் , மீன் வள ஆய்வாளர் திருப்பதி, மேற்பார்வையாளர் மகேந்திரன் மற்றும் பாதுகாவலர்கள் லட்சுமணன், அருண் உள்ளிட்ட குழுவினர் குழுவாக மீன் மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிலையங்களில், இருப்பு குடோன்களில் பலதரப்பட்ட திலேபியா,

பாறை,வாளை மீன், ரோகு, கட்லா, மீர்கால் ,புல்கெண்டை ,கண்ணாடி கெண்டை என ஆந்திரா ,டேம் மற்றும் உள்ளூர் மீன்களை ஆய்வு செய்தனர். ஒரு விற்பனை கடையில் மட்டும் மிர்கால் வகை மீன்கள் நாள்பட்டு கெடும் நிலையில் இருந்தது. ஐந்து கிலோ அளவிலானது அப்புறப்படுத்தி விற்பனையாளருக்கு எச்சரிக்கை செய்யப்பட்டது.

மேலும் மீன்கள் நீண்ட நாள் கெடாமல் இருக்க பார்மலின் கெமிக்கல் ஏதும் மீன்களில் உள்ளனவா, ஏதும் தெளித்து இருக்க வாய்ப்புள்ளதா என பார்மலின் பரிசோதனை கிட் உபகரணம் கொண்டு உடனடி பார்மலின் பரிசோதனைகள் இருப்பு மீன்கள், விற்பனை மீன்கள் மற்றும் சமையல் செய்யும் இடத்தில் கட் செய்த மீன்கள் என பல்வேறு இடங்களில் பார்மிலின் கண்டுபிடிக்கும் கிட் கொண்டு கள ஆய்வில் அதில் கிட் உள்ள ஸ்டிரிப் மூலம் சோதனை செய்யப்படும். மீனின் சதை பகுதி மற்றும் இதர பகுதி செதில்கள் என பல பகுதிகளில் ஒட்டி நனைத்து எடுத்து பின்பு கிட்டில் உள்ள ரீஏஜென்ட் திரவ சொட்டு விடும்போது மீன்களில் ஃபார்மலின் கலந்து இருக்கும் பட்சத்தில் அந்த ஏட்டில் (ஸ்டிரிட்) நீல நிற கலர் மாறும் , இல்லாத இருக்கும் பட்சத்தில் நிறம் மாற்றமின்றி தோன்றும். ஆய்வில் எந்த மீனிலும் அதாவது ஸ்டிரிப்பில் அவ்வாறான கலர் மாற்றம் நிகழவில்லை . பார்மலின் ஏதும் தெளிக்கப்படவில்லை என உறுதி செய்யப்பட்டது.

ஆவியின் போது நீர்வீழ்ச்சி செல்லும் பாதை, பேருந்து நிலையம் சுற்றி உள்ள பகுதிகள், முதலைப்பண்ணை அருகில்



என பல்வேறு இடங்களில் உணவகங்கள் இறைச்சி மற்றும் மீன் வறுவல் கடைகளில் தீவிரமாக ஆய்வு செய்தபோது பேருந்து நிலையம் அருகில் இரண்டு கடைகளில் இருந்துமுறையேபலமுறைபயன்படுத்திய எண்ணெய் ஒரு லிட்டர், செயற்கை நிறமூட்டி பவுடர்கள் பறிமுதல் செய்து அப்புறப்படுத்தப்பட்டது.

மேற்படி கடை உரிமையாளர்களுக்கு மாவட்ட நியமன அலுவலர் உத்தரவுபடி தலா ரூ . 1,000 (ஆயிரம் ரூபாய்) உடனடி அபராதம் விதித்து எச்சரிக்கை நோட்டீஸ் வழங்கப்பட்டது. விற்பனை நிலையங்களில் மீன்கள் வெயில் படாத வாரும், நீண்ட நேரம் வெயிலில் வைக்காமல்பாதுகாப்பாகஐஸ்பெட்டியில் வைத்து பராமரித்து விற்பனை செய்யவும், மீன் வறுவல் மற்றும் மசாலா தடவிய மீன் இறைச்சி உரிய கண்ணாடி பெட்டி அல்லது தூசிகள் உள்ளிட்ட அயற் காரணிகள் படாதவாறு பாதுகாப்பாக முறையில் காட்சிப்படுத்திடவும், ஒருமுறை பயன்படுத்திய சமையல் எண்ணெய் மீண்டும் மீண்டும் பயன்படுத்தாமலும் செயற்கை நிலம்மூட்டிகள் கண்டிப்பாக தவிர்க்கவும் எச்சரிக்கை செய்யப்பட்டது.

சுற்றுப்புற சுகாதாரம் தன் சுத்தம் மூலப்பொருட்கள் தரமானதாகவும் பயன்படுத்திடவும் அனைத்து உணவு வணிகர்களும்உணவுபாதுகாப்புசான்றிதழ் பெற்று வணிகம் செய்திடவும் முறையாக புதுப்பித்தல் வேண்டுமென உணவு பாதுகாப்பு அலுவலர் நந்தகோபால் தெரிவித்தார்.



# தஞ்சாவூரில் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

தஞ்சாவூர் மே 12

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் தலைமையில் நடைபெற்றது

கூட்டத்தில் வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, குடும்ப அட்டை ,பட்டா மாற்றம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 206 மனுக்களை மாவட்ட கலெக்டரிடம் வழங்கினார்கள்

இம்மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் உத்தரவிட்டார்

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன் மாவட்ட வன அலுவலர் கார்த்திகேயணி, சமூக பாதுகாப்பு திட்டதனி துணை ஆட்சியர் சௌமியா, உதவிய ஆணையர் (கலால்) ரேணுகா தேவி மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்



தேனி மாவட்டம், வீரபாண்டி பேரூராட்சிப் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயிலில் நடைபெறவுள்ள சித்திரை பெருந்திருவிழாவையொட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடுப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் (11.05.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். திருவிழாவிற்கு வரும் பக்தர்களின் பாதுகாப்பு, போக்குவரத்து வசதி, குடிநீர், சுகாதாரம் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு, தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் சிறப்பாக மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.



# உரிய இழப்பீடு வழங்க கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு

கோவை மே:12

கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கம் ஏர்முனை இளைஞர் அணி சார்பாக கோவை மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர். மனுவில் கடந்த வாரங்களில் எதிர்பாராமல் வந்த சூறாவளி காற்று மற்றும் மழையால் கோவை மாவட்டத்தில் பல இடங்களில் வாழை தென்னை பாக்கு மற்றும் பல பயிர்கள் முறிந்தும் வேறோடு சய்ந்தும் கடும் சேதம் ஏற்பட்டிருக்கிறது.இதனால் உழவர்களுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கிறது குறிப்பாக வாழையை நம்பி ஒன்றறை ஆண்டு செலவு செய்து காத்திருந்த உழவர்களுக்கு வாழ்வாதாரம் மிக கடுமையாக பாதித்து இருக்கிறது.

உழவர்கள் உரிய இழப்பீடு வழங்க கோரி வேளாண்துறையை அனுகிய போது அரசு வாழை ஒன்றுக்கு இழப்பீடாக 6 ரூபாய் வழங்குவதாக சொன்னார்கள் இந்த தொகைவிழுந்தவாழையைஅகற்றுவதற்கு கூட பத்தாது,அரசு வேளாண்துறை வாழை ஒன்றுக்கு வளர்த்து அறுவடை செய்ய 150 ரூபாய் செலவு ஆகும் என்று சொல்கிறது ஆனால் இழப்பீடு மட்டும் 6 ரூபாய் வழங்குவது உழவர்களுக்கு அதிர்ச்சி அளிக்கிறது எனவே தாங்கள் ஆய்வு செய்து உழவர்களுக்கு உரிய இழப்பீடு கிடைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் கேட்டுக்கொள்கிறோம். அதேபோல் நூற்றுக்கு 35 மரத்திற்கு மேல் சேதாரம் ஏற்பட்டால்தான் இழப்பீடு வழங்குவதாக சொன்னார்கள் பாக்கு வாழை மற்றும் மரப்பயிர்கள் பல வருடமாக வருவாய் தரும் 1 மரம் 20 மரம் என்றுமுறிந்துவிழுந்திருக்கிறதுஅதிகமான இடங்களில் எனவே விழுந்த மரத்திற்கு ஏற்ப இழப்பீடு வழங்க வேண்டும் என்று கூறினர்

# ஈரோடு ஆட்சியர் தலைமையில் மனு நீதி நாள் கூட்டம்



ஈரோடு மே 12

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, இலவச வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், மின்னணு குடும்ப அட்டை, மின் இணைப்பு, தெரு விளக்கு, ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 150 மனுக்கள் வரப்பெற்றன. பொது மக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சாந்த குமார், தனித்துணை ஆட்சியர் செல்வராஜ், மாற்றுத்திறனாளி நல அலுவலர் பூபதி உட்படபலர் கலந்து கொண்டனர்.

### தேனி மாவட்டத்தில்

# கலெக்டர் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: 114 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது



தேனி, மே. 12

தேனி மாவட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 114 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது.

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் (11.05.2026) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 114 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், பொது மக்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 114 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், பெரியகுளம் சார் ஆட்சியர் ரஜத்பீடன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தமிழரசி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) ராமகிருஷ்ணன், மாவட்ட வழங்கல் அலுவலர் நல்லையா, மாவட்ட ஆட்சியரின்கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) கதிர்வேல், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) கவிதா, உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.